International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 02 Issue: 03 July to August 2020 www.irjtsjournal.org

# மலையகத் தோட்டத் தொழில்முறைமையில் கங்காணி: பஞ்சம் பிழைக்க வந்த சீமை நாவலை அடிப்படையாகக் கொண்டதோர் மதிப்பீடு

**நாகரத்னம் சுதர்ஷினி**

*விரிவுரையாளர், மொழிகள் துறை, சபரகமுவ பல்கலைக்கழகம்*

*இலங்கை*

*சுருக்கம்*

இலக்கியங்கள் அவை தோன்றி காலப் பின்னணியைச் சார்ந்த சமுதாயத்தைப் பிரதிபலிப்பதிலும் சமுதாயத்தின் வாழ்க்கை நிலைகளையும் அச்சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை வெளிப்படுத்துவதிலும் இன்றியமையாத இடத்தினைப் பெறுகின்றன. சமுதாயம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கான நிலைபேறான கூறுகளையும் கால ஓட்டத்தில் மாற்றத்திற்குள்ளாகும் கூறுகளையும் தன்னகத்தே கொண்டிருப்பதால் அக்கூறுகளின் வெளிப்பாடுகளாய் அமையும் படைப்புகளில் அத்தகு மாற்றங்களை செவ்வனே தன் படைப்பில் உள்வாங்குவது படைப்பாசிரியர்களின் கடமையாகின்றது. அந்தவகையில், நாவலானது எழுதப்பட்ட காலத்தின் உண்மையான வாழ்வியலையும், பழக்கவழக்கங்களையும் வெளியிடுவதோடு, மனித வாழ்க்கையின் மதிப்புரையாகவும் திகழ்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழில் பிரவேகித்த நாவலானது ஈழத்திலும் முக்கிய பல நாவலாசிரியர்களைத் தோற்றுவித்துள்ளது. அவர்களின் படைப்புகளும் காலம் கடந்தும் கடந்த காலத்தை கண்முன் கட்டமைக்கின்றன. இவ்வடிப்படையில், 'பஞ்சம் பிழைக்க வந்த *சீமை*' என்ற நாவல் மலையகத்தைச் சார்ந்த படைப்பிலக்கியவாதியான மு.சிவலிங்கம் 2015 ஆம் ஆண்டு மலையக மக்களின் கடந்த காலத்தை நிகழ்காலத்தில் கண்முன் கட்டமைக்கும் வகையில் கட்டமைக்கும் நோக்கில் எழுதப்பட்ட வரலாற்று நெடுங்கதையாகும். இதனை முதன்மை ஆதாரமாகக் கொண்டு மலையகத் தோட்டத் தொழில்முறைமையில் கங்காணிகளின் வகிபாகம் கடமைகள் என்பவற்றையும், பஞ்சம் பிழைக்க வந்த *சீமையில்* உலவும் கங்காணியின் தனித்துவம் என்பவற்றை மதிப்பீடு செய்யும் மதிப்பீடு செய்யும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

*திறவுச்சொற்கள்: கங்காணிகள், பஞ்சம் பிழைக்க வந்த சீமை, மலையகம்*

## I. அறிமுகம்

தென்னிந்தியாவில் தொழிலாளர்களை தேடும் பணி 'ஊழிய வேட்டை' எனப்பட்டது. 'கூலிகள்' என்ற பதமே தொழிலாளர்களைக் குறிக்கப் பயன்பட்டது. இக்கூலிகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு

அவர்களை கண்காணிக்கும் பொறுப்பு தலைவருக்கு வழங்கப்பட்டது. இந்திய தேசத்திலிருந்து இங்கு வந்த, சாதியில் உயர்ந்த, இந்திய தேசத்தில் சற்று அதிகாரம் மிக்கவர்களாக இருந்தவர்களே இவ்வாறு தலைவர்களாகச் செயற்பட்டனர். மலையகத்தில் நிலவிய வர்க்க அமைப்பு முறை அவர்களின் நிலைப்பாட்டை தெளிவாக வரையறை செய்கின்றது.

- மேல் வகுப்பினர்
- மத்தியதர வகுப்பினர்
- கீழ் வகுப்பினர்
    - கங்காணி
    - பெரிய கங்காணி
    - சில்லறை கங்காணி அல்லது சிறிய கங்காணி
- தொழிலாளர்கள்
- வேறு தொழில் செய்வோர்

இவ்வாறான இவ்வர்க்கக் கட்டமைப்பில் மேல் வகுப்பினராக ஆங்கிலேயர்கள் செயற்பட, மத்தியதர வகுப்பினராக கல்வி கற்ற, அரசாங்கத் தொழில் புரிந்த இலங்கைத் தமிழர்கள் காணப்பட்டனர். கீழ் வகுப்பினராக கட்டமைக்கப்பட்ட தென்னிந்தியர்களில் கங்காணிகள் முதலிடம் பெற்றுத் திகழ்ந்தனர். இவர்களின் இந்நிலைக்கு மேற்கூறப்பட்ட காரணங்களும் அடிப்படையாகின எனலாம்.

தென்னிந்தியாவிலிருந்து ஆட்களை அழைத்து வரவும், அவ்வாறு அழைத்து வரும் மக்களுக்குத் தலைவராகவும் கண்காணிப்பாளர்களாகவும் ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்டவர்கள் கங்காணி எனப்பட்டனர். 'கண்காணி' என்ற சொல்லின் மருவிய வடிவமே கங்காணி ஆகும். இவர் குழுவின் ஏனைய அங்கத்தவர்களுடன் ஒப்பிடுகையில் சமூகரீதியில் அந்தஸ்த்து கூடியவராக இருந்தார். இவர்களே ஆள்திரட்டும் முகவர்களாகவும் செயற்பட்டனர். எனவே இம்முறை கங்காணி முறைமை எனப்பட்டது. இவ்வகையில் இக்கங்காணிகள் மலையகத் தொழில் முறைமையில் முக்கியமானவர்களாகவும், தொழிலாளர்களின் வாழ்க்கையில் இன்றியமையாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் பற்றிய வெளிப்;பாடுகள் ஆரம்ப காலம் முதல் இலக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

'எண்ணிக் குழி வெட்டி

இடுப்பொடிஞ்சி நிக்கயிலே

வெட்டு வெட்டு' எங்குறானே

வேலையத்த கங்காணி...' (ஸி.வி.வேலுப்பிள்ளை: 1976, மாமன்மகளே, பக்.13)

மேலும் இந்நூலில் கங்காணிகள் பற்றிய பல விடயங்கள் பாடல்களின் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக மலையகம் சார்ந்த இலக்கியங்களில் கங்காணிகள் பற்றிய வெளிப்பாடுகள் இன்றிமையாதவையாகக் காணப்படுகின்றன. இவ்வடிப்படையில் 'பஞ்சம் பிழைக்க வந்த *சீமை*' என்ற வரலாற்று நெடுங்கதையின் வழி கங்காணியர் பற்றிய வெளிப்பாடுகளைக் காண்போம்.

பஞ்சம் பிழைக்க வந்த *சீமை* – தனித்துவங்கள்

தென்னிந்திய தேசத்திலிருந்து இலங்கையை நோக்கி புலம்பெயர்ந்த மக்களின் வரலாறு தொடர்பாகவும், இலங்கைக்கு வந்ததன் பின்னர் அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள், உரிமைப் பிரச்சினைகள், தொழிற் பிரச்சினைகள் எனப் பல விடயங்கள் பல நாவல்களின் பேசுபொருளாகப் பேசப்பட்டிருந்த போதும் தென்னிந்திய தேசம் தொடங்கிய அவர்களின் நீண்ட பயணம் எனும் விடயம் தெளிவாகப் பேசப்படவில்லை எனலாம். எனினும் பஞ்சம் பிழைக்க வந்த *சீமை*யானது தென்னிந்திய தேசத்தில் அவர்களின்; நிலை, புலம்பெயர்விற்கான பல காரணங்கள் என்பவற்றை வெளிப்படுத்துகிறது. இந்நிலை நாம் அறியாத பல விடயங்களை அறியச் செய்கிறது. குறிப்பாக அவர்களின் புலம்பெயர்வு மீண்டும் தாய்நாடு நோக்கித் திரும்பும் வேட்கையோடு கூடியது என்பதை,

> 'தொழில் செஞ்சு ஊர் திரும்புற வரைக்கும் நீத்தான் தொணையா இருக்கணும், வழி காட்டணும்...' (பஞ்சம் பிழைக்க வந்த *சீமை*: பக், 2)

என்ற அர்ச்சுனனின் கூற்று இதனை வெளிப்படுத்துகிறது. பஞ்சம் அவர்களை அறியாத தேசம் செல்லவும் தூண்டியது என்பதை,

> 'இவ்வளவு தான் மனித உலகம் என்று கிராமத்து வேலிக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்த அவர்களுக், வரட்சியும், வறுமையும், வேறு உலகம் இருப்பதையும் காட்டியது..' (பக், 04)

> 'வயிறு காயத் தொடங்கும் போது மூளை இயங்கத் தொடங்கும் என்பார்கள். அவர்களது பட்டினி நிலைமை வாழ்க்கையை தேடுவதற்கு பரதேசம் போக நினைத்தது.' (பக், 04)

போன்ற பல விடயங்களை நாவலில் காணப்படும் கூற்றுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அது போல கங்காணிகளின் செயற்பாடுகள் பற்றிய செய்திகளை தென்னிந்திய தேசம், இலங்கை எனும் இரு தளங்களில் எம் கண்முன் கட்டமைப்பது இந்நாவலின் பிறிதொரு தனித்துவமாகக் காணப்படுகிறது. இத்தனித்துவத்தின் அடிப்படையில் பஞ்சம் பிழைக்க *சீமை* கட்டமைக்கும் கங்காணிமார் பற்றிய வெளிப்பாடுகள் வருமாறு அமைகின்றன.

இந்நாவல் கங்காணியரை மூன்று வகையில் வெளிப்படுத்துகிறது. ஆள்கட்டி, பெரிய கங்காணி, சில்லறைக் கங்காணி என்போரே அவர்களாவர். 'ஆள்கட்டி' என்பவன் தென்னகத்தில் தன்னை கங்காணி என்று அடையாளப்படுத்திக் கொள்பவனாகவும், அதிகாரம் மிக்கவனாகவும் வெளிப்படுத்திக் கொள்ளும் கதாபாத்திமாகத் திகழுகின்றான். எனினும் இவர்களின் அதிகாரம் என்பது தொழிலாளர்களை இலங்கை கொண்டு சேர்க்கும் வரை மட்டுமே செயல் வடிவம் கொள்கின்றது. இந்நாவலில் சங்கிலியன் என்ற கதாபாத்திரம் இதற்கு தக்க சான்றாக வெளிப்படுத்தப்படுகின்றான். இவ்வாறு ஆள்கட்டிகளாக இருப்பவர்கள் இலங்கைக்கு ஆட்களை சேர்த்து அனுப்பும் வரை ஆள்கட்டியாக இருப்பான். ஆள்கட்டியாக இருக்கும் போது இலங்கைக்கு கூலி ஆட்களை சேகரித்துக்கொடுக்கும் வேலையில் பொறுப்பாக இருந்து, திறமையாக நடந்து கொண்டால் தோட்டங்களில் மேற்பார்வை செய்யும் அதிகாரம் வழங்கப்படும். இவ்வதிகாரம் படைத்தவன் 'பெரிய கங்காணி' என்று அடையாளப்படுத்தப்படுகின்றான். ஆகவே, மேற்கூறப்பட்ட தகுதியுடையவனே ஆள்கட்டி என்ற நிலையிலிருந்து மேற்பார்வை செய்யும் பெரிய கங்காணியாகிறான். காத்தமுத்து பெரிய கங்காணி, பழனியாண்டி பெரிய கங்காணி, காளிமுத்து பெரிய கங்காணி, பச்சைமுத்து பெரிய கங்காணிகள் போன்றோர் சிறந்த எடுத்துக்காட்டுகளாவர். சில்லறைக் கங்காணி என்று நாவலில் வெளிப்படுத்தப்படும் சின்ன கங்காணிகள் பெரிய கங்காணிகளுக்கு வேலை பார்ப்பவர்களாக வெளிப்படுத்தப்படுகின்றனர். ராமையா, பரட்டையன் போன்ற கதாபாத்திரங்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவர்கள் இலங்கையில் வசிப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆள்கட்டி

ஆள்கட்டியாக இருப்பவன் தன்னை கங்காணி என்ற அடிப்படையிலேயே மக்கள் மத்தியில் அறிமுகம் செய்து கொள்வது நாவலின் வழி வெளிப்படுத்தப்படுவதோடு அவன் செய்யும் கண்காணிப்புப் பணிகள் அவனை அப்பெயர் கொண்டு மக்களும் அழைக்கக் காரணமாக அமைந்திருக்கலாம். கொடுக்கும் பணத்தை கண்காணித்தல், பணம் பெறும் தலைகளின் எண்ணிக்கையை கண்காணித்தல், பணம் பெற்றோர் வீடுகளுக்குச் சென்று வரும் வரை கண்காணித்தல், அவ்வாறு வீட்டுக்கு சிலர் செல்லும் போது அவர்கள் சார்பில் சிலரை பணயமாக வைத்து கண்காணித்தில், இயற்கையை கண்காணித்தல், செல்லும் வழியில் மக்களை கண்காணித்தல் என்று பொறுப்பாய் அவர்களை இலங்கை கொண்டு சேர்க்கும் வரையில் கண்காணிப்பு செய்வதால் இவர்களுக்கும் இக்காரணப்பெயர் வழங்குவது பொருத்தமெனலாம். இவ்வாறு கங்காணிகள் மூன்று வகைப்படுத்தப்பட்டுள்ள நாவலின் அடிப்படையில் பெரிய கங்காணி, சின்ன கங்காணி, ஆள்கட்டிகளின் செயற்பாடுகள் சற்று வேறுபட்டதாகே வெளிப்படுத்தப்படுகின்றன. ஆள்கட்டிக் கங்காணிகளின் செயற்பாடு தென்னிந்தியா, இலங்கை என்ற இரு தளங்களில் வெளிப்படுத்தப்படுகிறது.

தென்னிந்தியாவில் ஆள்கட்டியாக செயற்படும் போது அவர்கள் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுகிறார்கள்.

– ஆள்திரட்டுதலின் போது முற்பணம் வழங்குதல்

ஆள்கட்டுதல் இரண்டு வகையில் இடம்பெற்றது. முதலாவது அரசாங்கம் சிலோனுக்கு ஆள் கட்டி அனுப்புதல். இங்கு அரசாங்கம் சார்பாக ஆள்கட்டியனுப்புவது கங்காணிகளின் செயல். இரண்டாவது ஏஜண்டு கம்பனிகள் ஆள்கட்டி அனுப்புதல். இதன் போது முற்பணம் வழங்குவது ஆள்கட்டியின் கடமையாகக் காணப்படுகிறது.

– கடன் வழங்குதல்

தொழிலாளர்களுக்கு பயணச்செலவு, உணவுச் செலவு, முன்பணச்செலவு என்பவற்றை ஆங்கிலேயர்கள் வழங்கியிருந்த போதும் அவற்றை அவர்கள் இலங்கை வந்த பிறகு அவர்களின் கூலியிருந்து கழித்தல். அரசாங்கம் இலவசமாக வழங்கிய சலுகைகளை வழங்கி அதனை கடனாக குறித்துக்கொள்வது இவர்களின் செயலாகக் காணப்படுகிறது. மேலும், இவர்களுக்கு காலை உணவு வழங்காத சிலவேளைகளில் அவ்வுணவுக்கு கணக்கு காட்டி அதனையே இரவு உணவாக தொழிலாளர்களுக்கு வழங்குவது போன்ற செயல்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

– பயண விபரங்கள் பற்றி எடுத்துக்கூறுதல்

'போன வாட்டி ஒரு எளந்தாரி சகதியில மாட்டிக்கவும் அவன இழுக்க ஒருத்தன் புடிக்கவும், அப்புறம் அவன இழுக்க ஒருத்தனும் அப்புறம் ஒருத்தனும் நாலு பேருமா சகதிக்குள்ள முழுகிப் போன பரிதாபம் இப்ப நெனச்சாலும் ஈரக்கொழ நடுங்குது..!.' என்று வேதனையோடு எச்சரித்தான்.' (பக்: 38), தங்குமிடம், போகும் வழி, மிருகங்களின் நடமாட்டம் இருக்கும் இடங்கள், அவற்றை விரட்ட செய்ய வேண்டியவை என அனைத்தையும் அவன் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறான்.

– மனிதர்களை நம்பாது பணம் கொடுத்ததும் பணயக்கைதிகளைப் போல நடத்துதல்.

பணம் பெற்றுக்கொண்ட ஐந்து நண்பர்களும் வீட்டுக்கு செல்ல முயற்சிக்கும் போது இருவரை பணயமாக வைத்துக்கொண்டு, 'நீங்கரெண்டு பேரும் இங்க என் கண்காணிப்புல இருக்குறீஹ...' (பக்: 16) என்று கூறுவதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

– வழிகாட்டியாக இருத்தல்

கோயிலை அடையாளம் காட்டுதல், எரிக்கும் மரங்கள் பற்றி சொல்லிக் கொடுத்தல், தண்ணீர் எடுக்கப் போகும் போது சத்தமிட்டுக் கொண்டு, கற்களை வீசிக்கொண்டும் செல்லும் படி சொல்லிக் கொடுத்தவற்றை உதாரணமாகக் கூறலாம்.

– சொத்துடையவர்களாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளுதல்.

'சங்கிலியன பாக்க முடியாது...! அப்பப்பா.. என்ன தெனாவட்டு...! வெரலு முழுக்க பவுனு, பட்டுக் கர வேட்டி, கறுப்புக் கோட்டு, சட்டையும் மாட்டிக்கிட்டு, பண்ணையாரு மாதிரி, ஹி,ஹி,ஹி..! (பக்: 02) என்ற

கூற்று ஆள்கட்டிகள் தங்களை பெரியவர்களாகவும், அதிகாரம் படைத்தவர்களாகவும், வசதியாக வாழ்வதாக அவர்களை நம்ப வைப்பதற்காக அலங்காரம் செய்துகொள்பவர்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மேலும் மெய்க்காப்பாளர்கள் போல ஆட்களை வைத்திருத்தல், முண்டாசு கட்டியிருத்தல், கோட்டு என்ற குளிர் தேசத்து உடையை அணிந்திருத்தல், ஜரிகை வேட்டி, வைர மோதிரம், கடிகாரம், தலைப்பாகை என்று தன்னை மேம்படுத்திக்காட்டுபவர்களாக உள்ளனர்.

– போக்கு வரத்து செலவுக்கென்று பணம் கொண்டு வரப்பணித்தல்

கொடுக்கும் முன்பணத்தில் சிறிய தொகையை போகும் வழியில் பயணச்செலவு ஏற்பட்டால் தேவைப்படுமெனக் கூறி எடுத்து வைத்திருக்கப்பணித்தல்.

– தன்னை அதிகாரம் நிறைந்தவராகக் காட்டிக் கொள்ளுதல்.

கடன் பணம் கொடுக்கும் போதும் அம்மக்களை சந்திக்கும் போதும் அதிகாரத் தோரணையுடன் மக்களை இழிவாகப் பேசுதல். ஆனால் இலங்கையில் அவர்களை விட அதிகாரம் படைத்த பலர் இருப்பர்.

– வைத்தியனாய் செயற்படல்

அம்மக்களுக்கு அவர்கள் அறியாத தொற்று நோய்கள் ஏற்பட்ட போதும், காட்டு மிருகங்கள் கடித்த போதும் செய்ய வேண்டியவற்றை எடுத்துக்கூறி வைத்தியனைப் போல செயற்படுதல். செல்லும் வழியில் சிலரை பாம்பு கடித்த போது அவர்களின் நாடி பிடித்து பார்த்து அவர்கள் பிழைக்க மாட்டார்கள் எனக்கூறியதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

– அரிசி போன்ற உணவுப் பொருட்களை பதுக்குதல்

மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்படும் போது இவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் உணவுப் பொருட்களை வழங்காது சிக்கனப்படுத்துதல்.

– தோற்கருவிகளை கொண்டு வரப் பணித்தல்.

செல்லும் வழி பற்றிய முன்னனுபவம் கொண்டவன் என்ற வகையில் மக்களுக்கு அறிவுரைகளைக் கூறும் அவனின் முக்கிய செயல்களுள் ஒன்றாக தோற்கருவிகளை கொண்டு வரப்பணிக்கும் கடமை காணப்படுகிறது. அக்கருவியே செல்லும் காட்டு வழியில் வரும் மிருகங்களை விரட்டுவதற்கு துணையாக இருக்கிறது.

பெரிய கங்காணிகள்

இவர்களால் முன்னெடுக்கப்படும் செயல்கள், அவர்களின் பண்புகள் என்ற அடிப்படையில் நோக்கும் போது,

– மேற்பார்வை செய்தல்

பெரிய கங்காணி அதிகாரம் படைத்தவர்களாகவும், தென்னிந்தியர்கள் இலங்கைக்கு வந்து முகாம்களில் தங்கியிருக்கும் பேர்து அங்கு வந்து அவர்களின் ஆரோக்கியம், உணவு போன்ற

விடயங்களை மேற்பார்வை செய்து அது தொடர்பில் ஆங்கிலேயரிடம் கூறும் செயல்களில் ஈடுபடுபவர்களாக உள்ளனர்.

– தொழிலாளர்களை கட்டுப்படுத்தல்

நண்பர்கள் நால்வரையும் பிரிக்கும் செயலினை எடுத்துக்காட்டாகக் கூறலாம். அதாவது அவர்கள் ஒன்றாகத் தொழில் செய்வதையும் கூடிப் பேசுவதையும் கண்டு அவர்களை பிரித்து வௌ;வேறு தோட்டங்களில் வேலை செய்யப் பணிக்கின்றமையைக் கூறலாம்.

– முகாமைத்துவத்துடன் தொழிலாளர்களை இணைக்கும் இணைப்புப் பாலமாக செயற்படல்.

இக்கடமையினை பெரிய கங்காணிகள் செவ்வனே செய்யும் போது நிர்வாகத்தினர் மகிழ்ந்து அவர்களுக்கு வழங்கும் சம்பளம் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். சந்தோசப் பணம் என்பது நிர்வாகத்தினரை மகிழ்ச்சிப்படுத்தும் போது வழங்கப்படும் மேலதிக சம்பளமாகும். தோட்ட உரிமையாளர்களுக்கு கங்காணிகள மீது ஏற்பட்ட விசுவாசத்தினால் சந்தோசமாக வழங்கப்படுவது. கங்காணிகள் தொழிலாளர்களையும் நிர்வாகத்தையும் இணைக்கும் வகையில் செயற்படுவதற்காக வழங்கப்படும் சம்பளமாகும். இவ்வடிப்படையில் இது பெரிய கங்காணிகளின் தலையாய கடமையாகின்றது. மேலும் முகாமில் தொழிலாளர்களுக்கு நோய் ஏற்பட்ட போது துரையிடம் கூறச் செல்லுவது தக்க எடுத்துக்காட்டாகும்.

– குழுத் தலைவராக செயற்படல்

அது மட்டுமின்றி பெரிய கங்காணிகளுக்கு கிடைக்கும் இன்னொரு சம்பளம் தலைக்காசு (பென்ஸ்காசு) அதாவது கங்காணியின் தலைமையின் கீழ் இயங்கும் தொழிலாளர்களின் தலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கப்படும் சம்பளம். இது குழுத் தலைவராக செயற்படுவதால் கிடைக்கும் சம்பளமாகும்.

– தொழிலாளர்களின் காப்பாளராக செயற்படல்.

ஆங்கிலேயர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நேரங்களில் தொழிலாளர்களின் காப்பாளராகத் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளல்.

– கடன் வழங்குதல், வசூலித்தல்.

> 'வழிப் பயணத்துச் சாப்பாடு செலவுகளும் இனாமாகவே வழங்கப்பட்டன. வள்ளங்கள் செலவுகளும் இனாமாகவே வழங்கப்பட்டன. ஆனால் தோட்டச் சொந்தக்காரர்களுக்குத் தெரியாமல், கங்காணி அந்த செலவுகளையெல்லாம் கூலிகள் கணக்கில் எழுதி வைத்துவிட்டு, உழைத்தக் கூலியில் பாதிக்குப் பாதி கழித்துக் கொண்டே மிகுதியைக் கொடுப்பான். (பக்:156)
>
> கங்காணிகள், புதுப் புது பொய் கணக்குகளை எழுதி, கடனை தீர்க்க முடியாதவர்களாகவே அவர்களை கைது செய்து வைத்திருந்தார்கள். பக்:169)

போன்ற கூற்றுகள் பெரிய கங்காணிகளின் பிறிதொரு இன்றியமையாத கடமையினை வெளிப்படுத்தி நிற்கின்றன. ' நம்ம கடன் கணக்கு பெரிய கங்காணி மூக்கன் கிட்டே இருக்கு.. ( பக் :163) இவ்வாறு இவர்கள் கணக்கு எழுதி வைத்திருக்கும் புத்தகம் 'பாஸ் புத்தகம்' எனப்படுகிறது. பெரிய கங்காணி மூக்கன் இறந்துவிட்ட போது இந்தப் பாஸ்புத்தகம் இன்றி ஒன்றும் செய்ய முடியாது என்று துரை அவனது கண்காணிப்பிலிருந்தவர்களின் பழைய கணக்குகளுக்கு விலக்களித்தமை இதற்கு தக்கசான்றாகத் திகழுகின்றது.

– அதிகாரம் மிக்கவனாக இருத்தல்

'கறுப்பண்ணன் கங்காணி என்பவனும் இந்தியக் கிராமத்தைச் சேர்ந்தவன்.. ஊர் சனம், ஒரே இனம், என்பதையெல்லாம் அதிகாரமும், பணமும் சேரும் போது, எவ்வளவு எளிதாக இழக்க முடிகிறது.? (பக்: 162) என்ற கூற்று இக்கருத்தினை பறை சாற்றி நிற்பதோடு பெரிய கங்காணிகள் ஆள்கட்டிக் கங்காணி, சில்லறைக் கங்காணி ஆகியோரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டவனாகக் காணப்படுகின்றான். அவன் பின்வரும் விடயங்கள் தொடர்பில் அதிகாரம் கொண்டவனாகக் காணப்பட்டான்.

- பங்கீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடல், கடைகளைக் கொண்டு நடத்துதல்

கங்காணி, தோட்டத்தில் கடையும் திறந்திருந்தான். பலசரக்கு, துணி மணிகள், சட்டி, பானைகள், கோப்பை, கிண்ணங்கள் எல்லாம் வைத்திருந்தான். (பக்: 171)

- குடும்பங்களை குடியமர்த்துதல்
- தொழிலாளர்களின் நிதிசார் தேவைகளை நிறைவேற்றுதல்
- நிர்வாகிகளுடன் வாதாடுதல்
- வேலைப் பகிர்வு
- சம்பளப் பகிர்வு
- தொழிலாளர்களை உருட்டி மிரட்டி வேலை வாங்குதல், தொழிலாளர்களுக்கு தண்டனை வழங்குதல்.

'எகனைக்கு மொகனையா' எதுவும் நடந்து போச்சின்னா கங்காணிமாருங்க கட்டி வச்சி அடிப்பானுங்க' (பக்: 147) இக்கூற்று இதனை வெளிப்படுத்தி நிற்கிறது.

- தொழிலாளர்கள் அணிய வேண்டிய உடையை தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

ஆண்கள் சட்டையணியக்கூடாது என கட்டளையிட்டிருந்தமையை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

– ஊர்களுக்குப் பெயர் சூட்டும் அதிகாரம் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இவ்வதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு பெரய கங்காணிகள் தோட்டங்களுக்கு புதுக்காடு, புதுமலை, தங்கமலை என்று காடு, மலை என்ற பெயi;களைக் கொண்டு தோட்டங்களை

அழைத்ததோடு சில சமயங்களில் சாதி, தொழிலை அடிப்படையாகக் கொண்டும் தோட்டங்களுக்கு பெயர் வைத்துள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

சில்லறைக் கங்காணி

பொதுவாக பெரிய கங்காணிகளின் எடுபிடிகளாக வெளிப்படுத்தபடும் இவர்கள், தொழிலாளர்கள் மத்தியில் அதிகாரம் மிக்கவர்கள் போல தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் பண்புடையவர்களாக இருக்கின்றார்கள். அத்தோடு பெரிய கங்காணி பற்றிய அனைத்து விடயங்களையும் அறிந்து வைத்திருப்பவர்களாகவும், பெரிய கங்காணியின் தயவோடு அவர்களின் வாழ்க்கையை கொண்டு நடத்துபவர்களாகவும், அவர்கள் பற்றிய அனைத்து இரகசியங்களையும் அறிந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

> 'கங்காணிக்கு மூன்று சம்சாரங்கள்.. இரண்டு பேர் தற்போது இந்தியாவில் இருக்கிறார்கள்.. இது மூன்றாவது சம்சாரம், மூன்று பேரும் எந்த நேரமும் பயணம்போகிற மாதிரி சேலை உடுத்தி, வளையல், நகை நட்டுக்களோடுதான் வீட்டுக்குள் உலாவுவார்கள்..!' (பக்:178)

> 'பழனியாண்டி கங்காணி, ராமையா முன்னால் கைகட்டிக் கொண்டிருப்பதைப் போன்று நினைக்கிறான். இவன் கூலி சனங்களுக்கு எப்படியெப்படியெல்லாம் கொடுமைகள் செய்துக் கொண்டிருக்கிறான்.. தோட்டச் சொந்தக்காரன், தொழிலாளரின் சேம நலன்களுக்கு கொடுக்கும் முன் பணத்தையெல்லாம் வாரி சுருட்டிக் கொள்கிறான். பாடுபடுகிறவர்களுக்கு பிச்சை கொடுப்பதைப் போலவே, இவன் விரும்பிய காசை கொடுக்கிறான். எத்தனை பேர்களை அழித்துக் கொண்டிருக்கிறான். எத்தனை பெண்களை, காடென்றும், மேடென்றும், வீடென்றும் பாராமல் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் வல்லுறவு செய்திருக்கிறான்..! 'ரெண்டு நாளைக்கு ஒருக்கா இவனுக்கு பொம்பளை வேணும் !' இவனுக்காக எத்தனை முறை இந்தக் கொடுமைகளுக்கு ஏவல் வேலை செய்திருக்கிறேன்.? பெரியகங்காணிக்கு துரோகம் செய்வது பாவமில்லை, என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டான்.' (பக்: 180)

மேற்கூறப்பட்ட கூற்றுகள் அதற்கு தக்க சான்றாகத் திகழ்வதோடு அவை பெரிய கங்காணிகள் பற்றி அறியவும் துணை செய்கின்றன.

இவ்வாறாக இந்நாவலினூடாக ஆள்கட்டிக் கங்காணி, பெரிய கங்காணி, சிறிய கங்காணி போன்றோர்களின் பண்புகளும், செயற்பாடுகளும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதோடு, அவர்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இருப்பினும் இந்நாவலின் வழி கங்காணிகளுக்கிடையிலான சில ஒற்றுமைகளையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

மனிதாபிமானமற்றவர்கள்

நரபலி பற்றி அறியாத வெள்ளையர்களுக்கு அது பற்றி எடுத்துரைத்து அதனை செய்யத்தூண்டி நம்பி வந்த அப்பாவித் தொழிலாளர்களை பலிகொடுப்பவர்களாக சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

‘கங்காணிகள் அற்பப் பொருளாகக் கருதும் தங்களது குலக்கொடி உறவுகளை சுதந்திரமாக காவு கொடுத்தார்கள்..' (பக்: 06)

பாலம் கட்டும் இடத்தில் மூவரை குழியில் தள்ளி அவர்கள் மேல் கற்களைப் போட்டு மூடும் போது, 'வெள்ளைக்காரர்கள் கண்களை மூடிகொண்டார்கள், கங்காணி பலமாகச் சிரித்தான். (பக்: 06)

இங்கு கங்காணிகள் தம்மை நம்பி வந்தவர்களை கொலை செய்யத் துணிந்தவர்களாக வெளிப்படுத்தப்படுகிறார்கள். நரபலி பற்றி அறியாதோருக்கு எடுத்துக்கூறுவதோடு அவனே முன்னின்று அதனை செய்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. மேலும், கூலிகளை அழைத்துச் செல்வது பாதுகாப்பற்றது அவர்கள் இறந்து போவார்கள் என்று தெரிந்தும் பணம் தொடர்பில் சிந்தித்து அவர்களை சங்கிலியன் அழைத்து செல்லுவதும், சன்னாசி சுகவீனமுற்று படுத்தபோது சங்கிலியன் சன்னாசியை அப்படியே விட்டுவிட்டு செல்லும் வகையில் நடந்து கொண்ட விதம் போன்றன ஆள்கட்டி கங்காணிகளின் மனிதாபிமாமற்ற தன்மையினை வெளிப்படுத்தி நிற்கின்றன.

காட்டு முருகங்க கிட்ட தப்பிக்கலாம்..! கங்காணிமாருகிட்ட தப்பிக்க ஏலாது, தனிப் பொம்பளையா இருந்தாலும் சரி, புருசனோட இருந்தாலும் சரி, சின்னக்கங்காணி கூப்புடுவான், பெரிய கங்காணி கூப்புடுவான், கூலிக்காரனும் கூப்புடுவான்.. சீம தொரமாருங்களும் கூப்புடுவானுங்க, வாயி வயித்துல வந்த பொண்டுக நெறையப் பேரு செத்து செத்து போவாங்க, கண்டி சீமைக்கு வந்தது தப்பா போச்சி தம்பிகளா.!' (பக்: 149)

அப்புடி அவனுக ஆசப்பட்ட உருப்படிகள கூட்டிக்கிட்டு போற கங்காணி கிட்டேயும் அந்த அப்புராணி பொம்பளைங்க படுக்கணும். கங்காணி பயலுக மாதிரி, சீமத் தொரமாருங்க பொம்பளைங்கள பலாத்காரம் பண்ண மாட்டானுங்க.. விரும்புற பொம்பளங்ககிட்டதான் போவானுங்க.(பக்: 174)

பெரிய கங்காணி முழி பிதுங்கி நின்றான். அவனும், சில்லறை கங்காணியும் சேர்ந்துதான் அந்தப் பெண்கள் கர்ப்பமாவதற்கு காரணமாகவிருந்தார்கள். (பக்: 165)

போன்ற கூற்றுகள் பெண்கள் பெரிய கங்காணி, சில்லறைக் கங்காணிகளின் மனிதாபிமானமற்ற கீழ்தனமாக செயல்களினால் அடையும் துன்பங்களை வெளிப்படுத்துகின்றன.

தொழிலாளர்களிடம் பேசும் விதம்

ஆள்கட்டிகள் மக்களின் ஏழ்மை, கருணை, குடும்பத்தினரின் மீது கொண்ட அளவு கடந்;த அன்பு போன்றவற்றை லாவகமாக பயன்படுத்தக்கூடிய வகையில் அவர்களை கவரும் வகையில் பேசி அழைத்துச் செல்லும் திறமையுடையவர்களாக காணப்படுகிறார்கள். 'நீ விருப்பப்பட்டா பொண்டாட்டி கூட கெடைக்கும்....! சிலோன் பொண்டாட்டி!' (பக்:29) என்ற சங்கிலியனின் கூற்று இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழுவதோடு, அவன் அதிகாரத் தோரணையில் பல இழிவான வார்த்தைகளை பயன்படுத்துவதையும், மக்களை 'பக்கி' என்று மரியாதை குறைவாக நடத்துவதையும் கூறலாம். தெழிலாளர்கள் சோர்வடையும் போது அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் பேசுதல், நையாண்டித் தனமாகப் பேசுதல் என்று தென்னிந்திய தேசத்தில் தன்னை வெளிப்படுத்திய ஆள்கட்டி கங்காணி 'கடலுக்கு அங்கிட்டு பொத்திகிட்டு வந்தீக.. மன்னார் கர ஏறினதும் அவென் அவென் தொறக்குறீங்க...! இங்க பாருங்க... நான் நெனச்சாதான் நீயெல்லாம் கோப்பி காடு போவ முடியும்.. இல்லாட்டி கடல்ல எறங்கி ஊருக்கு திலும்ப வேண்டியதுதான் லே..!' (பக்:66) எனக் கோபமாகப் பேசுவதைக் காணலாம்.

> 'டேய் இங்க வா.!' 'ஏலேய் அங்க போ.!' 'ஏய் கட்டயா..!' 'ஏய் நெட்டயா..!' 'ஏய் முண்டக்கண்ணா..!' 'ஏய் பொம்பள, ஏய் கறுப்பி.!' 'ஏய் நெட்டச்சி..!' 'ஏய் ஒல்லிச்சி..!' என அவமானப்படுத்தி, உடல் குறைகளை அடையாளப்படுத்திக் கூப்பிட்டார்கள். (பக்: 135)

என்று புதிய கங்காணிகளாக அறிமுகப்படுத்தப்பட்டவர்கள் அவர்களின் குறைகளை பெயராகச் சூட்டி அழைத்து அவர்களை மரியாதை குறைவாக நடத்தி தமது அதிகாரத்தினை வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறாக கங்காணிகள் தொழிலாளர்களிடம் தேவை கருதி அன்பாகப் பேசுபவர்களாகவும் பிற சந்தர்ப்பங்களில் மரியாதையின்றியும், தூசண வார்த்தைகளைப் பேசுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

சாதிப் பெருமை பேசுபவர்களாக காணப்பட்டமை

ஆளுகட்டி சங்கிலி கவுண்டன் என்று மக்களால் அழைக்கப்படும் சங்கிலியன் தன்னை தேவர் வம்சம் என்று அடையாளப்படுத்திக் கொண்டு கிராமத்தவர்களின் சாதியைக் கேட்டு குறித்து வைத்துக்கொள்ளும் பண்புடையவனாகக் காணப்படுகின்றான்.

> காளிமுத்துவுக்கு அவன் சாதிக்காரன் மாடசாமி தூக்குப் பேணியில் தண்ணிச் சுட வைத்து காப்பி ஊற்றிக் கொண்டான். மான், மரை வலையில் அகப்பட்டாலும், முதலாவது கங்காணியின் சாதிக்காரன் வெட்டிக் கொத்தி ஒரு கால் சப்பையை எடுத்துக் கொண்ட பிறகுதான் மற்றவர்கள் தங்கள் பங்குகளை எடுத்துக் கொள்வார்கள். கிராமத்திலிருந்து தேசம் தாண்டி வந்த காட்டுக்குள்ளேயும் சாதி இருந்தது.. (பக்: 155)

என்ற கூற்று இலங்கையிலும் கங்காணிகள் சாதிக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடியவர்களாக இருந்தமையை வெளிப்படுத்துகிறது. இதற்கு முக்கிய காரணம் தென்னிந்தியாவிலிருந்து

தொழிலாளர்களை அழைத்து வரும் போது ஆள்கட்டி கங்காணிகளும், பெரிய, சிறிய கங்காணிகளும் மக்களை கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய கூறாக சாதியைக் கருதியமையாகும். ஆபிரிக்கத்தொழிலாளர்கள் தம்வசம் இல்லாத போது தென்னிந்திய தொழிலாளர்களை அடையாளம் கண்டு கொண்ட ஆங்கிலேயர் சாதி எனும் ஒரு விடயம் இந்தியர்களே இந்தியர்களைக் கட்டுப்படுத்த காணப்படுவதை கண்டுகொண்டு அதனை பயன்படுத்த விளைந்ததன் விளைவே இதற்கு பிரதான காரணமாகும்.

இயற்கை அனர்த்தங்கள், தொற்று நோய் ஏற்படுதல் என்பவற்றை முற்கூட்டியே அறியும் பண்பு காணப்படுதல்

'கதிராயி கடல் கொணம் இந்த வாரம் முழுக்க சரியில்ல. ஒரே கோவமும், கொந்தளிப்புமா இருக்கு. மலபார்காரனுங்கவுட்டு படகு ஒன்னுமே சரியில்லே...! இந்தவாட்டி சேதாரம் கடுமையாவே இருக்கும். அம்பதையும் தட்டும், நூறையும் தட்டும்.' (பக்: 19), மின்னல் வரும் போது மரத்துக்கடியில் நிற்க விடாது அழைத்துச் செல்லல் போன்றனவும், நோய் ஏற்படுவதற்கு முன்னரே தொழிலாளர்களுக்கு அறிவுரை கூறுதல், துரைமார்களுக்கு அறிவுரை கூறுதல் போன்றன இவற்றுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

உறவினர்களை உடன் வைத்து தொழில் வழங்கும் பண்பு

சங்கிலியன் தனது மச்சினன்மார்களை வேலை வைத்திருத்தல். பெரிய கங்காணி தனது சாதிக்காரர்களை தன்னோடு வைத்துக்கொள்ள தனி லயன்களை ஒதுக்கிக்கொடுத்தல், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு பேணுதல் போன்றன கங்காணிகளிடம் காணப்படக்கூடிய பொதுப்பண்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் பெற்றுத் தரும் சலுகைகளை பெற்றுத் தராதிருத்தல்.

> தென்னிந்தியாவில் ஆள்கட்டி வரும்படி ஏற்பாடு செய்த 'கங்காணி சிஸ்டம்' எவ்வளவு விபரீதமானது என்பதை அரசும், தோட்ட சொந்தக்காரர்களும் உணரத்தொடங்கினார்கள். தோட்டச் சொந்தக்காரர்கள், கூலிகளுக்கு சமைத்துப் போடுவதற்கு கொடுத்த பணத்தையும், சமையல் சாமான்களையும் கங்காணிகள் பதுக்கி வைத்துக் கொண்டு அரைப் பட்டினி, கொலைப் பட்டினி போட்டு வழிப் பயணத்தில் நூற்றுக் கணக்கானவர்களை சாகடித்துக் கொண்டிருந்தார்கள். (பக்: 93)
>
> இவ்வாறு அரசாங்கம் அற்ப உதவிகளைச் செய்தாலும், கங்காணிமார்கள் கூலிகளை கூடாரங்களில் தங்குவதற்கு விடுவதில்லை. கூலிகள், கூடாரங்களை அசுத்தமாக்கி விடுகிறார்கள் என்று குற்றம் சுமத்தினார்கள். (பக்: 94)

போன்ற கூற்றுகள் கங்காணிகள் தென்னிந்திய தேசத்தில் அரசாங்கம் கொடுத்த சலுகைகள் அனைத்தையும் கொடுத்துப் பின்னர் அதனைக் கடனாக குறித்து வசூலிப்பதில் தொடங்கும்

அவர்களின் இப்பண்பு மண்டபங்களில் உணவு வழங்கும் போது, சம்பளம் வழங்கும் போது, ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது என பல விடயங்களில் வெளிப்படுகின்றது. ஆள்கட்டி முதல் சில்லறைக் கங்காணி வரை இவ்விடயத்தில் ஒத்த பண்புடையவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் தம்மை மாத்திரம் நினைத்து தொழிலாளர்களை சுரண்டுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறாக பெரிய கங்காணி, சில்லறைக் கங்காணி, ஆள்கட்டி கங்காணி போன்றோரின் செயற்பாடுகளும் அவர்கள் செய்யும் கடமைகளும் ஒன்றுபட்டும் வேறுபட்டும் காணப்பட்ட போதிலும் அவற்றில் சுயநலமும், தொழிலாளர்கள் மீதான அடக்குமுறைகளின் வெளிப்பாடும், அதிகார வெறியுமே அடித்தளமாக இருக்கின்றன.

கங்காணிகளின் அதிகார வெளிப்பாட்டுக்கான அடிப்படைக் காரணங்கள்

தொழிலுக்காக கங்காணிகளுடன் செல்லும் அவர்கள், கிராமத்தை தவிர பிற இடங்கள் பற்றி அறியாத அப்பாவிகளாக இருந்தமை.

> 'அவனும் கிராமத்தவன். அவனை அவர்கள் அறிந்திருந்தனர். கண்காணாத ஒரு தேசத்துக்கு ஒருவனை நம்பி பின்னால போவதற்கு ஏற்பட்டிருக்கும் தைரியத்துக்கும் இந்த அறிமுகம் ஆதரவாக இருந்தது.' (பக்: 10)

என்ற கூற்று அவர்கள் ஆள்கட்டி மனிதாபிமானமற்றவன் என்று அறிந்த போதும் அவர்களின் அறியாமையும் வறுமையும் அவனை மட்டுமே நம்பச் சொல்கின்றது. அத்தோடு அவர்கள் செல்லும் வழி பற்றியோ, இலங்கையின் நடைமுறைகள் பற்றியோ எதுவும் அறிந்திருக்கவில்லை. குறிப்பாக அந்த மக்கள் செல்லும் கடல், காட்டுப் பயணமார்க்கத்தில் காணப்பட்ட பாதுகாப்பின்மையின் விளைவால் அவர்கள் ஓய்வெடுக்க வேண்டிய இடத்தைக் கூட பழக்கப்பட்ட கங்காணியே தீர்மானிக்க வேண்டியிருந்தது.

> 'கங்காணி காட்டும் காடுகளிலிருக்கின்ற பொட்டல்கள், மரத்தடிகள், மரத்தடிகள், நீர் நிலை காணும் இடங்களில் இளைப்பாறி.....'(பக்: 27)

மேலும் கங்காணிகள் மூலமும், ஏஜெண்டுகள் மூலமும் இரு வழிகளில் மக்கள் வெளிதேசங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்ட போதிலும், 'ஆள் திரட்டும் ஏஜண்டுகள் கொடுமையான ஒப்பந்தங்களை தொழிலாளர்களோடு எழுதிக்கொள்வார்கள். கங்காணி மூலம் ஆள்திரட்டும் முறை ஓரளவு நிபந்தனைகள் தளர்ச்சியாக இருந்தபடியால், தொழிலாளர்கள் கங்காணி பின்னாலேயே செல்வதற்கு விரும்பினார்கள்.' (பக்:11) என்ற கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் காரணம். மக்கள் கங்காணிகள் பின்னால் செல்வதற்கான காரணத்தை வெளிப்படுத்துகிறது.

> கங்காணி, மேஸ்திரியெல்லாம் சங்கிலியன்தானே.. தம்பிகளா..! நாம கண்ணக் கட்டி காட்டுல விட்ட கதையா நிக்கிறோம்.. கோப்பித் தோட்டம் போயி சேர்ற வரைக்கும் சங்கிலியன் நமக்கு தேவ.. (பக்:105)

ஆள்கட்டும் முறையில் கங்காணி முறையில் காணப்பட்ட இலகுதன்மை, அவர்களின் அறியாமை, பயணமார்க்கம் பற்றிய தெளிவின்மை, முன் அனுபவமற்ற தன்மை போன்ற காரணங்கள் அவர்கள் கங்காணியை மட்டும் நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது. இந்நிலை கங்காணிகள் அதிகாரம் எனும் உச்சுக் கொம்பில் அமர்ந்துவிடவும் மக்கள் அடிமைகளாகிப் போகவும் காரணமெனலாம்.

இவ்வாறாக கங்காணிகளின் செயலும் பண்புகளும், மக்கள் அவர்களுக்கு அடி பணிவதற்கான காரணங்களும் வெளிப்படுத்தப்பட்ட இந்நாவலின் சிறப்பம்சங்களாக விதந்துகூறத்தக்க முதலாவது விடயமாகக் காணப்படுவது கங்காணிகள் கருணையற்றவர்கள், மக்களை சுரண்டுபவர்களாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்குள்ளும் அன்பு உண்டு என்பது கதாபாத்திரங்களின் கூற்று வழியாக குறிப்பாக மக்களின் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதும், இதுவரை கட்டமைக்கப்பட்டு வந்த கங்காணியர் எனும் காட்சிப்படிமம் சற்று மாற்றம் காண்பதற்கு வழிவகுக்கின்றது.

அன்பு கொண்டவனாகவும் அனுதாபம் தெரிவிப்பவனாகவும் வெளிப்படுத்தப்படும் பண்பு.

ஆள்கட்டிக் கங்காணியான சங்கிலியின் பின்வரும் கூற்றுகள் அவன் மக்களிடம் கடுமையாக நடந்து கொண்ட போதிலும் அன்பானவன் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

> 'போன வாட்டி ஒரு எளந்தாரி சகதியில மாட்டிக்கவும் அவன இழுக்க ஒருத்தன் புடிக்கவும், அப்புறம் அவன இழுக்க ஒருத்தனும் அப்புறம் ஒருத்தனும் நாலு பேருமா சகதிக்குள்ள முழுகிப் போன பரிதாபம் இப்ப நெனச்சாலும் ஈரக்கொழ நடுங்குது..!.' என்று வேதனையோடு எச்சரித்தான்.' (பக்: 38),

வழிகாட்டியாக செல்லும் போது முன் நடந்த துன்பகரமான செயல்களை இரைமீட்டிச் செல்லும் போதும்,

> 'பாவப்பட்ட சனங்க, அதுகளும் மனுச உசுருங்க, அதுக பொண்டாட்டி புள்ளைகளும் நல்லா இருக்கணும்.!' கல்லிலும் ஈரம் இருக்கும் என்பது போல் சங்கிலியன் கடவுளை நினைக்கும் போது மனசாட்சிக்குப் பயந்து நின்றான். (பக்:41)'
>
> 'ராமேஸ்வரா..! மன்னார் கரையிலும் இம்புட்டு உசுருகளையும் பத்தரமா கர சேக்கணும் ரகு ராமையா.!' (பக்: 43)

என்றவாறாக மனசாட்சிக்கும், கடவுளுக்கும் பயந்தவனாக வெளிப்படுத்தப்படுகின்றான்.

> அவர்களின் நிலைமையைப் பார்த்த சங்கிலியனும் அவனுடைய மச்சினன் மாறப்பனும் மௌனமாக நின்றார்கள். அவர்களுக்கும் மனித மனம்தானே இருக்கிறது... அவர்களது அழுகையினால் தங்களது மனைவி மக்களையும் நினைத்து மனம் கலங்கினார்கள். சங்கிலியன் அவர்களது அழுகையை நிறுத்துவதற்கு முயன்றான். (பக்: 80)

பணம், தனது சீமானையும் நினைத்து கடல் கடந்து வந்த போதும் அவனும் தன்னுடைய குடும்பத்தைப் பிரிந்து வாழ்கின்றான். அவனும் தொழிலாளர்கள் அனுபவிக்கும் அதே வேதனையை அனுபவித்துக்கொண்டிருக்கின்றான். அவன் கங்காணி என்ற அதிகாரம் கொண்டவன் என்றாலும் அவனை கங்காணியாக மட்டும் பார்த்தவர்களை, அவனையும் சக மனிதனாக பார்க்கச் செய்து அவர்களைப் பற்றியும் சிந்திக்கச் செய்கிறது இந்நாவல். மேலும்,

> காளிமுத்து கொஞ்சம் வாஞ்சையோடு அவர்களைத் திருப்பி அழைத்துக் கொண்டு கூடாரத்துக்குப் போனான். (பக்: 144)
>
> 'பெரிய கங்காணியின் இந்த பேச்சை ஒரு சில்லறை கங்காணி குறுக்கிட்டுப் பேசினான். 'இது உசுரோட வெளையாடுற வேல கங்காணி..! கூலிக பணத்த வுட்டுப் புடிப்போமுங்க.. கூடுமான மட்டும் சனங்கள அக்கரைக்கு அனுப்புறதுதான் சரின்னு படுது..!' என்றான். (பக்: 165)'

போன்ற கூற்றுகள் பெரிய கங்காணிகளும், சில்லறைக் கங்காணிகளும் கூட இப்பண்புடையவர்களாக இருக்கின்றமையை வெளிப்படுத்துகின்றன. அத்துடன் கங்காணிகள் இவ்வாறு மனிதாபிமானமுடையவர்களாக இருந்த போதும் அவர்கள் மனிதப்பண்பலிருந்து மாற்றமடைவதற்கான காரணங்களும், அவர்களின் சுயநலப் போக்கிற்கான காரணங்களும் இந்நாவலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை இந்நாவலின் பிறிதொரு சிறப்பு எனலாம்.

கங்காணிகள் முகங்கொடுக்கும் இடர்பாடுகளாக நாவலில் வெளிப்படுத்தப்படுபவை.

கடல் குணம் சரியில்லாது இருப்பது பற்றி பேசும் போது மனைவி ஒரு வாரம் தங்கிவிட்டுப் போகுமாறு கூற தன்னைப் பற்றி யோசிக்காது சீமான் வேலையை விட்டு அனுப்பிவிடுவார் என்று பயந்து உயிரை துச்சமாக மதித்தது செயற்படுவதும்: பணம்படைத்தவர்களாகவும், அதிகாரமுடையவர்களாகவும் இவர்கள் தொழலாளர்கள் முன்னர் தம்மை வெளிப்படுத்திக் கொண்டாலும் தொழில் நிமித்தம் இவர்கள் ஆங்கிலேயருக்கு அடிமைகளாக இருப்பதுவும், சங்கிலியன் தன் மனைவி தங்கையின் கணவனோடு கதைப்பதாக ஊரார் கூறுவதும், சில காலத்திற்குப் பின்னர் அவளை விலக்கிவிட வேண்டும் என்று அவன் நினைப்பது போன்ற விடயங்கள் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையும், இன்பகரமானதாக இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றன. பெரிய கங்காணி பழனியாண்டியின் மனைவி பூஞ்சோலையுடன் துரைமார்களும், சில்லறைக் கங்காணிகளும் தவறாக நடந்து கொள்வதும் அவள் நகை, பணம் என்று அனைத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிவிடுவதும், கங்காணி

சித்த சுயாதீனமற்றவனாக திரிவதும், நிர்வாகம் அவனது தொழிலைப் பறிப்பது போன்ற செயல்கள் கங்காணியர்கள் எதிர்கொண்ட சவால்களை வெளிப்படுத்துகின்றன.

> ‘மொதவாட்டி முனியாண்டி கங்காணி ஆனைகள வெரட்ட காட்டுக்கு தீ வெச்சிட்டான்னு சீமத் தொர தொவக்கால சுட்டுக் கொன்னுட்டானே... நாவகம் இருக்குதில்ல...!' (பக்: 87)

என்ற கூற்று கங்காணிகள் தொழிலாளிகளுக்கு சார்பாக செயற்படுகின்ற போது அவர்கள் வெள்ளையர்களால் தாக்கப்படுவதை பறைசாற்றுகின்றன.

> சங்கிலியன் கண்டிக்கும் கிராமத்துக்கும் இந்த பயணத்தோடு பத்து முறை நடந்திருக்கிறான், அவன் கெட்டவனாக இருந்தாலும், இரக்கமுள்ளவன்;. மச்சான் பெரிய கங்காணிக்கு விசுவாசமானவன். பத்து முறை அவன் கண்டிக்கும், இந்திய கிராமங்களுக்கும் சென்று ஆட்களை சேகரிப்பது முதல், அவர்களோடு மீண்டும் காடுகளில் நடந்து முடிந்தளவு கவனமாக அழைத்து வருவது வரை அவனும் சொல்லொன்னாத கஷ்டங்களை அனுபவிப்பவன். (பக்: 87)

பணத்திற்காக தொழிலாளர்களை அழைத்துச்சென்றாலும் கூட அதன்போது அவனும் சொல்லொனாத் துன்பங்களை அனுபவிக்கின்றான் என்ற விடயம் வெளிப்படுத்தப்படுகிறது.

> 'தம்பியளா...! நாம பொழைக்கப் போற சீமைக்குத்தான் போயிகிட்டு இருக்கோம்.. என்னைய நம்பி வந்த சனங்கள முடிஞ்ச மட்டும் காப்பாத்தி கர சேப்பேன். சனங்க நெறைய பேரு நடக்க முடியாம காட்டுக்குள்ளேயே இருக்காங்க... ஒரு வாட்டி பின்னால போயி முடியாத சனங்கள அழைச்சிக்கிட்டு வரணும்.. தனி மனுசனா என்னால மட்டும் முடியாத காரியம்... நீங்களும் கொஞ்ச பேர் ஒத்தாசைக்கி வருவீங்களா..?' (பக்: 87)
>
> ஆள் கட்டி என்றாலும், கங்காணி என்றாலும் சங்கிலியனும், அவனது மச்சினனும் பெருந் தொகையான மக்களை வழிநடத்திச் செல்வதில் மிகவும் கஷ்டப்பட்டனர். (பக்: 95)
>
> சங்கிலியனுக்கு சனங்களைக் கூட்டிக் கொண்டு போக மட்டும்தான் தெரியும். கொள்ளையர்கள் மத்தியில் அவனும் இந்தக் கூட்டத்தில் ஒருவன்தான். (பக்: 97)

போன்ற கூற்றுகளின் வழி கங்காணிகள் மக்களை அழைத்துச் செல்லும் போது எதிர்நோக்கும் இன்னல்களை காணக்கூடிதாகவுள்ளது.

> சங்கிலியனைப் பார்க்கும் போதும் பாவமாகத்தான் இருந்தது.. ரொம்பவும் இளைத்துப் போயிருந்தான். இவ்வளவு சனங்களையும் மேய்த்து இழுத்துக் கொண்டு போக வேண்டிய பொறுப்பு அவனிடம் இருக்கிறது.. (பக்: 99)

இங்கு சங்கிலியனின் கஷ்டத்தை பொதுமக்களின் கூற்றின் வழி வெளிப்படுத்தியிருப்பது கங்காணிகள் மீதாக கரிசனையை ஏற்படுத்துகின்றது.

மேலும் கொள்ளையர்கள் மத்தியில் இவர்களும் சாதாரணமானவனாக போராட வேண்டியுள்ளது, இயற்கை சீற்றங்களுக்கும், கொள்ளை நோய்களுக்கும் ஆளாக வேண்டியுள்ளமை போன்றனவும்

அவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களாக காட்டப்பட்டுள்ள, அதேவேளை ஆங்கிலேயரிடமும் கங்காணிகளை விட அதிகாரம் படைத்தவர்களிடம் அடிபணிந்து செயற்படவேண்டிய நிலை காணப்பட்டமை மிக முக்கியமாக எடுத்துக்கூறப்படவேண்டிய இடர்பாடாகக் காணப்படுகிறது.

'ஏய்..! அங்கேயே நில்லு..! என்னா சங்கதி..?' (பக்: 163)

நோய் ஏற்பட்டுள்ளமை பற்றி கூறச் செல்லும் போது பெரிய கங்காணி இவ்வாறு கட்டுப்படுத்தப்படுவது தக்க சான்றாகும். அதுமட்டுமின்றி தொழிலாளர்களுக்காக வேலை செய்யும் இவர்களுக்காக இங்கு யாரும் இல்லாத நிலையும் கங்காணிகள் நிர்வாகத்தின் இஷ்டப்படி தொழிலிருந்து விலக்கப்படுவது, தாக்கப்படுவது போன்றனவும் குறிப்பிடத்தக்கன. தொழிலாளர்களோ கங்காணிகள் என்ற இந்தியர்களுக்கு அடிமைகளாக இருந்தனர், ஆள்கட்டிகளும், சில்லறைக் கங்காணிகளும் கூட இவ்விடயத்தில் தொழிலாளர்களைப் போல இருக்க பெரிய கங்காணிகள் அந்நியருக்கு அடிமைகளாக இருக்கவேண்டிய நிலையும், அவனை திருப்திபடுத்த வேண்டிய நிலையும் காணப்பட்டது. இந்நிலை பெரிய கங்காணி என்பவன் மீது சிறு பரிவை ஏற்படுத்துகின்றது.

இத்தகு இடர்பாடுகளை முன்வைக்கும் இந்நாவல் மலையக வரலாற்றில் வெறுக்கப்பட்ட கங்காணிகள் பற்றிய எமது சிந்தனையில் மாற்றத்தினை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகிறது.

மாற்றங்கள்

'மற்ற சட்ட திட்டங்கள், அதிகாரங்கள், ஒடுக்கு முறைகள், அடி உதைகள், எல்லாமே கங்காணியின் ஆதிக்கத்துக்குள் மறைந்திருக்கும். கங்காணியின் பொய், களவு, திருகு தாளங்கள், பெண்கள் வல்லுறவுகள் எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும், அவனுக்கு மானசீகமாக மன்னிப்பு வழங்கியிருப்பார்கள். அவனின்றி ஓர் அனுவும் அசையாது என்பதை அறிந்திருந்ததால், கங்காணியை மீறி, அவனுக்கப்பால் தொழிலாளர்களிடம் வாடி வழக்கம் வைத்துக் கொள்ள மாட்டார்கள். தொழிலாளர்களை ஏறெடுத்துப்பார்க்கவே மாட்டார்கள்.. (பக்: 170)

என்ற மேற்கூறப்பட்ட கூற்றானது ஆரம்ப காலங்களில் கங்காணிகள் நிர்வாகத்தினர் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்தவர்களாகவும், அவர்கள் இன்றி அந்நியர்கள் தனித்து செயற்பட முடியாதவர்களாக இருந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துவதோடு,

'எழுபத்தைந்து தொழிலாளர்களும், தோட்டத்துக்கு கொடுக்க வேண்டிய கடனில முக்கால் வாசிக்கு மேலாக கங்காணி ராஸ்கல் பொய் கடன் கணக்கு எழுதியிருப்பான்..இப்போது தோட்டக்காடுகள் தோறும் கங்காணிகளின் திருட்டுதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது.. நூறு கூலிகள் வேலை செய்யும் தோட்டத்தில், நூற்றைம்பது கூலிகள் என்று தொகையை எழுதி சம்பளம் வாங்கிக் கொள்கிறான் 'திஸ் நாஸ்டி ராஸ்கல்.. ஹைட்ஸ் பம்கின் இன் ஹிஸ் கோட் பொக்கட்..! இந்த பேமானி ராஸ்கல் முழு பரங்கிக்காய கோட்டு பைக்குள்ள

மறைக்கிறான்..! கிளவர் ராஸ்கல்..! கெட்டிக்கார ராஸ்கல்..!' என்ற முனு முனுத்தவர், ஒரு முடிவுக்கு வந்தார். (பக்: )

என்ற கூற்றினூடாக ஆங்கிலேயர்களால் வெறுக்கப்பட்டவர்களாக கட்டமைக்கப்படுகிறார்கள். தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியும், தங்களது உரிமைக்காக ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று ஏற்பட்;ட சிந்தனையும்,

'பொணத்த வூட்டுக்கு கொண்டு போகாத..! பெரட்டுக்களத்துக்கு கொண்டு போ..!தொரப்பயல...அந்த பட்டாளத்தான.. மருதப்பன் கங்காணி பயலநீதி கேக்கணும்..! நியாயம் கேக்கணும்..! புள்ளத்தாச்சிக்கு உச்சி மலையில வேல குடுக்கக்கூடாது...சலுகை குடுக்கணும்.. லேசான வேல குடுக்கணும்..!' (பக்: 271)

இவனது நடத்தைகளுக்கேற்ப, பெரிய கங்காணியும் சில்லறை கங்காணிகளும்; தொழிலாளர்களிடம் கடுமையாக நடந்துக்கொள்ளவில்லை. (பக்: 282)

ஆங்கிலேயரும் கங்காணியரின் மீது கொண்டிருந்த கண்மூடித்தனமான நம்பிக்கைகள் செயலிழந்து போனமையும்,

ஒரு நாள் துரைமார் சங்க கூட்டம் நடந்தது.. கூட்டத்தில் கங்காணிமார்கள் பற்றி நிறைய பேசினார்கள்.. கங்காணி இல்லாவிட்டால், கூலிகளை மேய்த்து, வேலை வாங்க முடியாது.. என்றார்கள். கங்காணி நிறைய திருடுகிறான்... என்றார்கள் சிலர். கங்காணி தோட்டத்தில் திருடுவதில்லை.. கூலிகளிடம்தான் திருடுகிறான்.. என்றனர் சிலர். கங்காணி, பெண் தொழிலாளிகளிடம்; பாலியல் உறவுவைத்துக்கொள்கிறான்...என்றனர் சிலர்.' (பக்:

அவர்களின் அதிகார கட்டவிழ்ப்புக்கு காரணமாக அமைந்தேதாடு, பெரிய கங்காணிகளின் கீழ் அடிமைத்தனமாக செயற்பட்டுக் கொண்டிருந்த, ஓரளவு மனிதாபிமானத்துடன் கூடியவர்களாக இருந்த சில்லறைக் கங்காணிகள், 'ராமையா கங்காணி மெதுவாக வேலாயுதத்தை அருகில் அழைத்து, காதோடு காதாக சில யோசனைகளைச் சொன்னான். 'கூலி சனங்க தெயிரியமா நிமுந்துக்கிட்டது சந்தோசமா இருக்குது வேலாயுதம்..!' (பக்: 204). இதுபோன்ற சிந்தனையோடு கூடியவர்கள் காலப்போக்கில் பெரிய கங்காணிகள் போல செயற்படத் தொடங்கியமை

போன்ற பல காரணங்கள் கங்காணி என்ற கட்டமைப்பின் சிதைவிற்கு காரணமாக அமைந்ததோடு,

புதிதாக தொப்பித் தோட்டத்துக்கு வந்திருக்கும் மருதப்பன் கங்காணியிடம், பரட்டையன் பந்தம் பிடிக்கத் தொடங்கினான். புது துரை வந்த பிறகு, பெரிய கங்காணியின் கொட்டம் அடங்கிவிட்டது.. என்று 'கூலிக்காரன்கள்' எல்லோரும் 'நையாண்டி' பண்ணுகிறார்கள் என்று கங்காணியை சீண்டிவிட்டான். ( பக்: 253)

என்ற கூற்றின்படி பெரிய கங்காணிகள் அதிகாரமிழந்தவர்களாக தொழிலாளர்கள் 'கூலிகள்' என்று கேலி செய்யும்படியாக சூழ்நிலை மாற்றமடைந்ததை வெளிப்படுத்துகின்றன. எனினும்,

> கோப்பித் தோட்டத்து கொடுமைகள் இன்னும் மாறவில்லையென்றும், தேயிலைத் தோட்டத்திலும் அதே அதிகாரம், சிறு குற்றங்களுக்கெல்லாம் அடி, உதை.. சுகமில்லாவிட்டாலும், கட்டாயம் வேலைக்கு வரவேண்டும் என்ற கட்டளை, ஆறோடு ஆறு மணி வரை வேலை.. ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு மணி நேர வேலை, கடன் கணக்கு கங்காணி போட்டதுதான்.. சாமான் நிறுவையும் அரை குறைதான்..இந்த தோட்டத்தில் குறைகளை வாய் திறந்து கேட்பவர்களை, சாகும் வரை தோட்டத்துரை அடிப்பான்.. கங்காணியும் எடுத்ததற்கெல்லாம் ஊத்தைப் பேச்சுதான் பேசுவான்... (ப: 209- 210)
>
> ஒரு இளம்பெண் எழுந்து நின்று, வாய் வார்த்தை வரமுடியாமல், தயக்கத்தோடு,'அண்ணா..! இங்க பொம்பளைங்க ஒவ்வொரு நாளும் செத்துதான் பொழைக்கிறோம்..! தொரையிலருந்து, கங்காணிமாருங்க வரைக்கும், தொல்ல தாங்க முடியல்ல.. நாங்க கெட்டு சீரழியுறோம் அண்ணாமாருங்களே..!' என்று அழுதாள். (பக்:210)
>
> பெரிய கங்காணியாக பன்னடியான் என்று ஒருவன் வந்து சேர்ந்தான். இந்தக் கங்காணி, பச்சமுத்து கங்காணி, மருதப்பன் கங்காணிமார்களைவிட மிகவும் மோசமானவன். பயங்கரமான கொள்ளைக்காரன். தோட்டத்துக்குள்ளேயே இவன் பலசரக்கு கடை போட்டிருந்தான். (பக்: 295)

போன்ற கூற்றுகள் கங்காணியரின் ஆதிக்கம் முற்றுமுழுதாக அடங்கிவிட வில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது.

நாவலின் வழி வெளிப்படும் கங்காணிகளின் புதிய பரிமாணம்

'யூனியன் லீடர்; கங்காணி எனும் பெயர் மட்டும் யூனியன் லீடர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதே அடிமைத்தனமும், சுரண்டலும் இன்றும் மலையகத்தில் தொடரும் விதம் வருமாறு வெளிப்படுத்தப்படுகிறது.

> கங்காணி பிரட்டுக்களிலிருந்து விடுதலையாகி, இப்போது, யூனியன் பிரட்டு, கட்சி பிரட்டு, தலைவர் பிரட்டு, என்று மீண்டும் பிரட்டுக்களிடமே கைதிகளாகி விட்ட நிலைமை... சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்தக் கதையாகிக் கொண்டிருந்தது...(பக்:317)
>
> 'ஆமா..! இது சரிப்பட்டே வராது...!' எல்லோரும் ஒரே குரலில் சொன்னார்கள். அந்தக் காலத்துல தொரமார்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நடுவுல கங்காணி இருந்தான்.. இப்போ.....முதலாளிமாருக்கும்;, தொழிலாளிக்கும் நடுவுல யூனியன் தலவரு இருக்குறாரு...! அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் நடுவுல மந்திரியாகி நிக்கிறாரு..! 'அந்தக் காலத்து, தரகர் சிஸ்டம்...! அதே கங்காணி சிஸ்டம்..!' என்றான் ரத்தினபுரி சுப்ரமணியம்..! அவன் பத்தாம் வகுப்புவரை படித்தவன்.. (பக்: 317)

முடிவுரை

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் வரலாற்றில் மிக முக்கியமானவர்களாக பேசப்படும் கங்காணியர் பற்றிய பல விடயங்களை வெளிப்படுத்திய பஞ்சம் பிழைக்க வந்த சீமை கங்காணிகள் பற்றிய வகைப்பாடுகள், அவர்களின் கடமைகள், பண்புகள் என்பவற்றில் காணப்படும் வேறுபாடுகளின் வழியாக கங்காணியர் பற்றிய கட்டமைப்பில் காணப்படும் வகைப்பாடுகளை தெளிவுபடுத்துவதோடு அவர்களை ஒரேவிதமாக பார்க்கும் பொதுப்பார்வையிலிருந்து வேறுபடுத்தி அவர்களையும் பகுத்தறியும் தெளிவினை ஏற்படுத்தியுள்ளது. கதாபாத்திரங்களின் கூற்றுகளின் வழியாகவும் கங்காணிகள் பற்றிப் பேசப்படும் விடயங்கள், அவர்களின் வாழ்க்கையில் காணப்படும் இடர்கள், தொழில் நிலையில் அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டு அவர்கள் பற்றிய சிந்தனையில் சிறு மாற்றம் ஏற்பட வழி செய்துள்ளது. காலப்போக்கில் கங்காணியர் செல்வாக்கிழந்து போனபோதும் யூனியன் லீடர் எனும் புதுப்பரிணாமத்துடன் அவ்விடம் நிரப்பப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சுருக்கமாகக் கூறின் பஞ்சம் பிழைக்க வந்த சீமை கங்காணிகள் பற்றிய கட்டமைப்பில் புனர்நிர்மாணமொன்றை நிகழ்த்தி கொஞ்சம் கங்காணியர் மீது கரிசனை ஏற்படச்செய்துள்ளது.

உசாத்துணை நூற்பட்டியல்

[1] சாரல் நாடன், (1990) மலையகத் தமிழ் இலக்கியம், ராஜகிரிய தமிழ் மன்றம்.

[2] சிவலிங்கம். மு., (2015) பஞ்சம் பிழைக்க வந்த சீமை, கொட்டகலை: குறிஞ்சித் தமிழ் இலக்கிய மன்றம்.

[3] சிவராஜா.அ., (1992) மலையகத் தமிழரின் வரலாறும் இலக்கியங்களும், கண்டி.

[4] வேலுப்பிள்ளை. ஸி.வி., (1976) மாமன் மகனே – மலைநாட்டு மக்கள் பாடல்கள், கொழும்பு: மாவலிப் பிரசுரம்.